


கரூரில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பாக, வெள்ளிச் செங்கோலை நினைவுப் பரிசாக மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார். அருகில் கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளார்கள்.

# அனைத்துத் தரப்பினரும் சமவாய்ப்புகள் பெற்ற சமூகமாகத் திகழ தமிழ்நாடெங்கும் உறுதிமொழி!

## தந்தை பெரியார் பிறந்தநாள் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!



சென்னை, செப். 18-

தந்தை பெரியார் பிறந்த நாளில் சாதிய ஏற்றத் தாழ்வை நீக்கி, அனைத்துத் தரப்பினரும் சமவாய்ப்புகள் பெற்ற சமூகமாகத் திகழ தமிழ்நாடெங்கும் உறுதி மொழி எடுக்கப்பட்டது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது 'ட்விட்டர்' பதிவில் தெரிவித்துள்ளார்.

தந்தைபெரியார் அவர்களின் 147வது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள 'ட்விட்டர்' பதிவு வருமாறு:

"அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாக இருப்பவைகளை அழித்திட வேண்டும்" என்றார் தந்தை பெரியார்!

**நமது** #DravidianModel **அரசால்** #SocialJusticeDay **எனக் கடைப்பிடிக்கப்படும் பெரியாரின் பிறந்தநாளில், இந்தியாவின் வளர்ச்சிக்கும் இந்திய மக்களின் ஒற்றுமைக்கும் பெரும் தடையாக இருந்து வரும் சாதிய ஏற்றத்தாழ்வை நீக்கி, அனைவரையும் சமமாக நடத்தி, அனைத்துத் தரப்பினரும் சமவாய்ப்புகள் பெற்ற சமூகமாகத் திகழத் தமிழ்நாடெங்கும் உறுதிமொழி எடுக்கப்பட்டது!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

'என் வாக்குச்சாவடி வலிமையான வாக்குச்சாவடி' என்பதை உணர்த்திடும் வகையில்

# கோவை மாநகர் மாவட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்துவீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! நா.கார்த்திக் தலைமையில்!

கோவை, செப். 19 -

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி அவர்களின் வழிகாட்டுதலில் கோவை மாநகர் மாவட்ட நிர்வாகிகள் பகுதி பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் 12.09.2025 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் காந்திபுரம், குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள கோவை மாவட்டக் கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி

ப.ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம். பி.முருகன், கழக சட்டத் துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வே.பாலசுப்ரமணியம், ஆனந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், சங்கனூர் ஆனந்தகுமார், ச.குப்புசாமி, ச.கார்த்திகேயன், இரா.மணிகண்டன், ஆடிட்டர் வெ.சசிகுமார், சரஸ்வதி புஷ்பராஜ், தங்கம் சந்திரசேகர், நோயல் செல்வம், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் ப.பசுபதி, சிங்கை மு.சிவா, வ.ம.சண்முக சுந்தரம், கோவை லோகு, கே.எம்.ரவி, எ.எம்.கிருஷ்ணராஜு, சிங்கை அன்பு, கஸ்தூரி அருண், மார்க்கெட் எம்.மனோகரன், வி.ஐ.பதுருதீன், என்.ஜே.முருகேசன், அஞ்சுகம் பழனியப்பன், பரணி கே.பாக்கியராஜ், டெம்போ சிவா, சி.இராமச்சந்திரன், துரை.செந்தமிழ்ச்செல்வன், ஏ.எஸ்.நடராஜ், மா.நாகராஜ், ஆ.கண்ணன், ப. மோகன்ராஜ், பாபு (எ) பாலகிருஷ்ணன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா. தனபால், சிவப்பிரகாஷ், ஆர்.கே.சுரேஷ்குமார், ஏ.எஸ்.ஜெயக்குமார், நா.பாபு, கோவை அபு, வழக்கறிஞர் அன்புச்செழியன், சிவி.தீபா, சி.கே.கனிமொழி, கராத்தே அர்ஜுனன், வி.மணி,கண்ணன், அக்ரிபாலு, தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் வழக்கறிஞர் வினோத்குமார், வழக்கறிஞர் ஜேசுதாஸ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் லாரா பிரேம்தேவ், துரை.பிரவீண், க.மணிகண்டன் உள்பட பலர் கலந்து கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

**இரங்கல் தீர்மானம்**

11.09.2025 வியாழக்கிழமை அன்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சம்பந்தியும், மருமகன் சபரீசன் அவர்களின் தந்தையுமான வேதமூர்த்தி அவர்கள் உடல்நலக் குறைவால் மறைவெய்தினார். சபரீசன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் ஆழ்ந்த இரங்கல்களை இக்கூட்டதின் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறது.

"என் வாக்குச்சாவடி வலிமையான வாக்குச்சாவடி" என்பதை உணர்த்திடும் வகையில் அந்தந்த வாக்குசாவடிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணியினர், BDA, BLC என குறைந்தபட்சம் 100 பேர்களாவது இக்கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள் மற்றும் நிழற்படங்கள் (Photos), காட்சிப்படங்களை (Videos ) BDA க்கள் வாட்ஸப் குழுக்கள் மற்றும் செயலியில் பதிவேற்ற வேண்டும். தகவல் தொழில்நுட்ப அணி (IT WING) இப்பணியை ஒருங்கிணைக்க வேண்டும். ஆகவே பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்களை அழைத்து வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நடத்துவதற்கான வழிமுறைகளை வழங்கிட வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




## நீறுகளை ஊதி

# நெருப்பை அடையாளம் காட்டிய சுற்றுப்பயணச் சூறாவளி!

## தந்தை பெரியாருக்கு – கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



உன் தாடி முளைத்தபோது
சமூகத்துக்கு
மீசை முளைத்தது

இருட்டுச் சுவர்
இடியத் தொடங்கியது

கி.மு கி.பி பழைய கணக்கு
பெ.மு பெ.பி புதிய கணக்கு

நூற்றாண்டுகளாய்
எங்கள் புலிகள்
ஆடுகளுக்குப்
புல்பறித்துக் கொண்டும்
பல்தேய்த்துக் கொண்டுமிருந்தன

நகத்தில் கூர்மையும்
முகத்தில் மீசையும்
உண்டென்பதை
புலிகளுக்கு நீதான்
புலப்படுத்தினாய்

நீறுகளை ஊதி
நெருப்பை அடையாளம்காட்டிய
சுற்றுப்பயணச் சூறாவளி நீ

வர்க்கப் போரின்
இன்னோர் வடிவம்
உன் தர்க்கப்போர்

நீ சொன்ன பிறகுதான்
செருப்புத் தைத்தவன்
கையில் இருந்ததைக்
காலில் அணிந்தான்

நிர்வாணமாய்
நெசவு செய்தவன்
ஆடை சூடினான்

கலப்பையில் எழுதியவன்
காகிதத்தில் எழுதினான்

சூரியன் வந்ததும்
உடுக்கள் என்னும்
வடுக்கள் மறைவதுபோல்
உன் வருகையால்
வெள்ளை அழுக்கு
வெள்ளாவிவைத்து
வெளுக்கப்பட்டது

பழைமைவாதப் பாம்படித்ததும்
ஓலைக் குடிசைகளின்
ஓட்டடை அடித்ததும்
புலம்பும் புராணங்களுக்கெதிராய்ச்
சிலம்பம் சுற்றியதும்
உனது ஒற்றைக் கைத்தடிதான்

மூலக்கூறு பிரித்தால்
கடைசிவரை
தங்கம் தங்கம்தான்

உன் மரணத்தின்
முன் நிமிடம்வரை
நீ பேசும்புயல்தான்; பெரியார்தான்

கருப்பு நிலக்கரி வைரமாகக்
காலம் ஆகும்
கருப்பு வண்ணம் புரிதல்பெற
இன்னும் ஒரு யுகமாகும்

புகழ் வணக்கம்.



**– கவிப்பேரரசு வைரமுத்து**